# நாளொருவர் கொலையும்...

இராகவன்

நாளொருவர் கொலையும்
பொழுதொருவர் கடத்தலுமாய்
கழிகின்றன நமது நாட்கள்

நமக்கான
ஓர் இரங்கற் பாவை
யார் இசைக்கக்கூடும்?

நமக்கான
ஓர் அஞ்சலிக் குறிப்பை
எவர் எழுதக்கூடும்?

நமக்கான
ஓர் இரங்கலுரையை
யார் நிகழ்த்தக்கூடும்?

சுடப்பட்டிருந்தவன்
நமக்கு உறவினன் அல்ல
என்பதில்
மகிழ்கிறது அகம்

கடத்தப்பட்டவன்
எமக்கு சிநேகிதன் அல்ல
என்பதில்
ஆறுதலடைகிறது மனம்

நாளொருவர் கொலையும்
பொழுதொருவர் கடத்தலுமாய்
கழிகின்றன
நமது நாட்கள்...